நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C No.158/2020

<u>அ.சா: 6 (LW 4)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : முருகன். | | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

03.09.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
-----------------------------------------------------------------------

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 11.56 மு.ப

நான் தற்பொழுது தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சுந்தரேசன் எனது மகன் ஆவார். சுமார் 6 வருடத்திற்கு முன்பு இரவு 09.30 மணியளவில் எனது மகன் சுந்தரேசன் மற்றும் கிஷோருடன் கிஷோர் இருசக்கர வாகனத்தில் முத்துதேவன்பட்டி அருகே சென்று கொண்டிருந்தபொழுது நாடார் பள்ளி பேருந்தானது வேகமாக ஓட்டி வந்து அவரது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து நடந்ததாக கிஷோரின் தந்தையான அன்பு



SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.09.03 16:58:14 +0530

என்னிடம் தகவல் கூறினார். தகவல் கிடைத்தவுடன் நான் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அவருக்கு வலது கை, நெற்றி பகுதி மற்றும் நெஞ்சு பகுதி, கால் முறிந்திருந்தது. மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம். அடுத்த நாள் காலை 05.30 மணியளவில் சிகிச்சை பலனளிக்காமல் எனது மகன் சுந்தரேசன் இறந்துவிட்டார். பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தனர். பின்னர் உடலை நல்லடக்கம் செய்ய நாங்கள் பெற்றுக்கொண்டோம். அன்றைய தினம் பள்ளி பேருந்தை ஓட்டியவர் பெயர் ரங்கசாமி என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனக்கு கிஷோரின் தந்தை அன்பு என்பவர் விபத்து குறித்து தகவல் சொல்லிதான் தெரியும் என்றும் அந்த விபரத்தைதான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக புகார் யார் கொடுத்தார்கள் என்ன விபரம் சொன்னார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.02 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.09.03 16:58:23 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:03.09.2025

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C No.158/2020

<u>அ.சா:7 (LW 7)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது மீரா. | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

03.09.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.
---------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 12.02 பி.ப

நான் தற்பொழுது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 பகுதி அலுவலகம் முசிறியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.12.2019 அன்று நான் தேனி வட்டார வாகன போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் ஆய்வாளர் நிலை 2ஆக பணிபுரிந்தபொழுது பி.சி.பட்டி வட்ட காவல் ஆய்வாளர் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடித்ததின்படி வீரபாண்டி காவல் நிலைய குற்ற எண்.526/2019 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட TN 63 Z 7182 என்ற அசோக் லைலேண்ட் பள்ளியின் பேருந்தை ஆய்வு



SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.09.03 16:58:29 +0530

செய்தபொழுது front bumper left corner, front body sheet near front left head light ஆகியவை சேதமடைந்திருந்தது. பிரேக்கின் கால்தடை திறனம் 62 சதவீதமானது. ஸ்டேரிங் நல்ல நிலையில் இருந்தது. டயர்கள் நல்ல நிலையில் இருந்தது. இந்த விபத்தானது வாகனத்தின் எந்த வித இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

TN 63 Z 7182 என்ற அசோக லைலேண்ட் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

10.12.2019ம் தேதி மாலை 05.05 மணியளவில் TN 21 AQ 5711 என்ற யமஹா மோட்டார் இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்தேன். அதில் கீழ்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது.

1. Head light instrumental panel, head light visor, front number plate சேதமடைந்திருந்தது.

2. Rear right side body சேதமடைந்திருந்தது.

3. Handle bare left side ben towards backward நொறுங்கியிருந்தது.

அந்த வாகனத்தன் கால்தடை திறன் வாகனமானது இயக்கும் நிலையில் இல்லை. டயர்கள் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்தனாது வாகனத்தின் எந்த வித இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

TN 21 AQ 5711 என்ற யமஹாக மோட்டார் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆய்வின் போது ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவு சான்றிதழ், காப்பீடு சான்று ஆஜர்படுத்தவில்லை. பொதுவாக விபத்து



SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.09.03 16:58:34 +0530

நடந்த இடத்தை ஆய்வு செய்தால்தான் டயர் மார்க் அளவு குறித்து வாகனம் மெதுவாக வந்த்ததாத என்று கணிக்க முடியும் என்றால் சரிதான்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.12 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.09.03 16:58:39 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:03.09.2025